IJCRT.ORG ISSN : 2320-2882
INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)
An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# மாயூரம் விஸ்வநாத சாஸ்திரி: ஒரு தமிழிசை வாக்கேயக்காரரின் வாழ்க்கையும் இசை பங்களிப்பும்.

வெ. ஹரிசங்கர்

**முன்னுரை:**

தமிழிசை என்பது தமிழ் மொழியில் உருவான, தமிழரின் பாரம்பரியக் கலையாகிய இசை வடிவமாகும். இது தமிழ் இலக்கியம், மெய்ஞ்ஞானம், மதச் சிந்தனைகள், மற்றும் பாரம்பரிய கலைக்கூறுகள் ஆகியவற்றின் கலந்தொகுப்பாகக் கருதப்படுகிறது. சங்க காலம் முதல் இன்று வரை, தமிழிசை பல்வேறு பரிணாமங்களை அனுபவித்துள்ளதுடன், தென்னிந்திய இசைப் பாரம்பரியத்தில் தனித்துவமான இடத்தைப் பெற்றுள்ளது. தமிழிசையானது மிகத் திறமையான வாக்கேயக்காரர்களால் வலுவூட்டப்பட்ட இசையாகும். தமிழிசையின் வளர்ச்சிக்கு பெரும் பணியாற்றிய வாக்கேயக்காரர்களில் ஒருவராக மாயூரம் விஸ்வநாத சாஸ்திரி (1893 - 1958) பார்க்கப்படுகிறார். மேலும் ஒரு சிறந்த பாடகர் மற்றும் கல்வியாளர். பலராலும் பாராட்டப்படும் நாட்டுப் பற்றுள்ள மிக அழகான பாடல்களை இயற்றியுள்ளார். இதில், இவரது வாழ்க்கை மட்டுமல்ல இசை சிறப்புகளையும், சமூகக் கலாச்சார பங்களிப்பையும் ஆராய்கிறது.

இந்த ஆய்வு பார்வை, சாஸ்திரியின் கீர்த்தனைகள் தமிழிசை மரபில் கொண்டு வந்த மாற்றங்கள் குறித்து விளக்கமாக எடுத்துரைத்துள்ளேன்.

**வாழ்க்கை வரலாறு:**

விஸ்வநாத சாஸ்திரி 1893 நவம்பர் 27 அன்று மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள தேரிழந்தூரில் பிறந்தார். இராமசாமி கணபாடிகள் மற்றும் பாலாம்பாள் லட்சுமி ஆகியோருக்கு ஆறு குழந்தைகளில் இரண்டாவது குழந்தையாக பிறந்தார். இவர் சமஸ்கிருத படிப்பை பெற திருவையாறு கல்யாண் மஹால் சமஸ்கிருத கல்லூரியில் சேர்க்கப்பட்டார். அங்கு வேதங்களையும் சிறிது காலம் படித்தார். பின்னர் ஆங்கில கல்வியை பெற மயிலாடுதுறை நகராட்சி உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்தார். 1913இல் கமலாம்பாள் என்பவரை மணந்தார்.

1915ல் இவரது பெற்றோர் இறைவனடி சேர்ந்தனர் பின்னர் திருச்சிராப்பள்ளிக்கு குடி பெயர்ந்த இவர் ஆசிரியராகவும், இசைக்கலைஞராகவும் ஆனார்.

**இசைப் பணி மற்றும் வாக்கேயக்கார பங்களிப்பு:**

விஸ்வநாத சாஸ்திரியின் நெருங்கிய குடும்ப நண்பர்களான ஹரிகேசவநல்லூர் முத்தையா பாகவதர் மற்றும் பஞ்சாபகேச பாகவதர் ஆகியோரின் யோசனைப்படி மிகவும் கடினமான கலையான ஹரிகதாவிலும் மிகுந்த உற்சாகத்துடன் சில காலம் பங்கேற்றார். ஆர்மோனியம் வாசிப்பதற்கு கற்றுக்கொண்டு அதிலும் திறமை பெற்றார் சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் ‘‘சித் ரகாமினி’’ என்ற அவரது நாடகத்தை அரங்கேற்றினார். கர்நாடக இசையிலும் ஒரு முழு நேர இசைக் கலைஞராக வரவேண்டும் என்ற தீராத விருப்பம் காரணமாக அவர் நாமக்கல் நரசிம்மா ஐயங்கார் அவர்களை குருவாக்கிக் கொள்ள நினைத்து அவரிடம் மாணவரானார். பத்துவாத்திய கருவிகளை இசைப்பதில் வள்ளுவரான தேவகோட்டை தசவாத்தியம் வெங்கட்ராம ஐயங்கார், சிமிழி சுந்தரம் ஐயர் ஆகிய இசை வல்லுனர்களிடம் கர்நாடக இசைப் பயின்றார். விஸ்வநாத சாஸ்திரி முழுநேர இசை கலைஞராக ஆகும் லட்சியத்துடன் 1921ல் சென்னை நகரம் சென்றார். இந்தியாவிலும் வட இந்தியாவிலும் அதிக அளவில் ஏராளமான இசை கச்சேரிகள் செய்தார். புகழ்பெற்ற பக்கவாத்திய கலைஞர்கள் இவர் கச்சேரிகளில் உடன் வாசித்தனர்.

சாஸ்திரியின் படைப்புகள் வெவ்வேறு விதமான இசை வடிவங்களும் நடைகளும் அடங்கியவை. அவைகள் கர்நாடக இசை, மெல்லிசை, சாஸ்திர சங்கீதம் இணைந்த இசை, கிராமியம், நடன - நாடக இசை, பதம், காவடி சிந்து, தில்லானா முதலியன. வெவ்வேறு மொழிகளில் (தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம்) என்று தன் சொந்த கற்பனையில் ஏற்றப்பட்ட விதவிதமான வர்ணங்கள், கீர்த்தனைகள், ஸ்வரஜதி, ஓரடிப்பதம், த்ரிபதம், கண்ணிகள், காவடிச்சிந்து, ராகமாலிகா, உயிர்வக்க மாளிகா ஆகியவையே இவரது புகழுக்கு அடிக்கோலியவை. ஆசிரியரின் உயர்ந்த, பாராட்டத்தக்க கற்பனைத் திறனை இப்படைப்புகள் பறை சாற்றும். பக்த சங்கீத மண்டல் 1933ல் இவரால் இயற்றப்பட்டது. அவரது மாணவர்களுக்கு அவரது சாகித்தியங்களை கற்பித்தார். மேலும் சேர்ந்திசை பாடவும் கற்றுத்தந்தர். கல்யாணி, காம்போதி, தர்பார் ஆகிய ராகங்களில் நாட்டியத்துக்கு உகந்த பாடல்களும் ஏற்றி இருக்கிறார். நாட்டியத்திற்கு பொருத்தமான வெவ்வேறு நடைகளில் பதங்களை படைத்திருக்கிறார். உதாரணத்திற்கு தர்பார் ராகத்தில் கதாநாயகி தன் தோழியை கூப்பிட்டு திருத்தணியில் அமர்ந்திருக்கும் முருகனை கண்டு வா என்ற பெயரில் உள்ள ‘‘அழைத்துவாடி மானே’’ என்ற பாடலை சொல்லலாம்.

1921ல் மெட்ராஸ் மியூசிக் அகாடமி நடத்திய கிருதி போட்டியில் தானே சமஸ்கிருதத்தில் கிருதிகளை இயற்றி முதல் பரிசு பெற்றார். அந்த போட்டியின் நடுவர்கள்

டைகர் வரதச்சாரியார், டி. எல். வெங்கட்ராம ஐயர், ஜலதரங்கம் ராமய்யா செட்டியார் ஆவர். அவர் அந்த போட்டியில் தாமே இயற்றிய ”காமிதே கருணாவிதே” என்ற தோடி ராகத்தில் பாடிய கிருதி அந்த போட்டியில் மட்டும் இல்லாமல் சங்கீத உலகிலும் பெரிதும் பேசப்பட்டது பல சங்கீத வித்துவான்கள் இவரை பாராட்டினார்கள் அனைவருக்கும் மேலும் பல கிருதிகளை ஏற்ற ஊக்கப்படுத்தியது.

இவர் முருகர் பக்தர் என்பதால் பல கிருத்திகளை முருகர் மீது இயற்றியுள்ளார். இவர் தாய் மொழியான தமிழில் பல கிருதிகளை மற்றும் தேச பக்தி பாடல்கள் இயற்றியுள்ளார். இவரது கிருதிகளை, தேச பக்தி பாடல்களை பல சங்கீத வித்வான்கள் தங்கள் மேடை கச்சேரிகளில் இப்போது வரை பாடி வருகின்றனர்.

**விஸ்வநாத சாஸ்திரி அவர்கள் இயற்றிய பாடல்கள் பல தலைப்பு பெயர்களில் வெளியிடப்பட்டுள்ளது. அவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன:**

**1. வள்ளி பரிணய மணிப்ரவாள சகதம்:**

இது சாஸ்திரி அவர்களின் முதல் புத்தகம் 100 செய்யுட்கள் கொண்டது. 1926 இல் பதிப்பாகி வெளியிடப்பட்டது. தற்போது பதிப்பில் இல்லை.

**2. பாரத மாத்ரு ஸ்துதி:**

1930 ஆம் வருடம் மியூசிக் அகாடமி போட்டியில் பரிசு வழங்கப்பட்ட பாடல் அடங்கிய புத்தகம். இந்த புத்தகத்தில் அரசியல், சமூகம் சாராத இந்தியாவை தெய்வமாக வணங்கி புகழ்ந்து பாடியுள்ளார். இது 1932 ஆம் வருடத்தில் சங்கீதா அகாடமி மறு பதிப்பு (vol 2 & vol 3) இப்பாடல் சமஸ்கிருதத்தில் உள்ளது. இப்புத்தகத்திலேயே இப்பாடலுக்கான தமிழ், ஆங்கில மொழி பெயர்ப்பும் கொடுக்கப்பட்டுள்ளது.

**3. முருகன் புகழ் பாமாலை:**

இப்புத்தகம் 1933 இல் கதிர் காமத்தில் உள்ள சுவாமி தயானந்த சரஸ்வதி அவர்கள் உதவியுடன் வெளியிடப்பட்டது. இப்புத்தகம் முருகக்கடவுளை துதிக்கும் பாடல்கள் அடங்கியது.

**4. வேதபுரி கீர்த்தனைகள்:**

இப்புத்தகம் 1937 இல் பதிக்கப்பட்டது. இதில் நான்கே பாடல்கள் அடங்கியுள்ளன. பொருள் அடக்கத்தில் முதல் இரண்டு பாடல்கள் குழந்தைகளுக்காகவும் அடுத்த இரண்டு பாடல்கள் வயது வந்தவர்களுக்காகவும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

**5. முருகன் மதுர கீர்த்தனை:**

இப்புத்தகம் சாஸ்திரி அவர்களால் 1940 இல் இயற்றப்பட்டது. இப்புத்தகம் ஸ்வரக்குறிப்புகளுடன் 71 பாடல்கள் அடங்கியது இப்புத்தகம் நான்கு பாகங்களாக வெளியிடப்பட்டது. இதில் 22 பாடல்கள் முதல் பகுதியிலும் கன நடையிலும், இரண்டாவது

பகுதி கதிர்காமக் கடவுளை போற்றி 13 பாடல்களும், நாட்டியத்துக்கான ஆறு பதங்கள் மூன்றாம் பகுதியிலும், நான்காவது பகுதியில் பலவிதமான துறைகளில் 19 பாடல்களும் உள்ளன. அனுபந்தம் பிரிவில் 11 பாடல்கள் உள்ளன. இவற்றில் நான்கு பாடல்கள் மட்டுமே ஸ்வரக்குறிப்புகளுடன் காணப்படுகின்றன.

**6. பாரத் பஜன்:**

1948 ஆம் வருடம் வெளியிடப்பட்ட புத்தகம் 16 சமஸ்கிருத பாடல்கள் அடங்கியது. பாரத மாதாவை போற்றி ஒன்பது பாடல்கள் முதல் பாகத்திலும், காந்திஜியை பற்றி ஒன்பது பாடல்கள் இரண்டாம் பாகத்திலும் அடங்கும். சாஸ்திரி அவர்களின் சகோதரர் திரு. க. குப்புசாமி அவர்களால் இப்புத்தகங்களின் இரண்டாம் பதிப்பு ஏப்ரல் 1998 இல் வெளியாகியது. புத்தகத்தை இவர் தமிழிலும் 1986 ஆம் ஆண்டு வெளியிட்டார்.

**7. பாரத ஜெயகீதம்:**

நான்கு பாடல்களின் இசைக் குறிப்புகள் அடங்கிய சிறிய கையேடு. இந்திய தேசிய கீதத்துக்கு ஏற்றுக்கொள்ளப்படலாம் என்ற நம்பிக்கையில் 1948 இல் சாஸ்திரி அவர்களால் சமஸ்கிருதத்தில் இயற்றப்பட்டது.

**8. திருக்குறள் மதுர கீர்த்தனை:**

முதன்முதலாக போற்றத்தக்க ஈரடி வெண்பாவாகிய திருக்குறளுக்கு இசை மெட்டமைத்த பெருமை திரு சாஸ்திரி அவர்களுக்கே உரியது. மொத்தம் 289 கீர்த்தனைகளில் திருக்குறளை பகுத்து ஏழு பாகங்கள் ஆக்கியுள்ளார். அறத்துப்பால் என்ற தலைப்பில் 41 பாடல்கள் அடங்கிய புத்தகம் 1958-ம் வருடம் திருக்குறள் மதுர கீர்த்தனை முதல் பகுதி என்ற பெயரில் வெளியிடப்பட்டது. சங்கீத நாடக அகாடமியின் உதவியுடன் 1987 இல் 41 பாடல்கள் அடங்கிய திருக்குறள் மதுர கீர்த்தனை பகுதி 2 இரண்டாவது புத்தகம் வெளியாகியது. மீதமுள்ள ஏனைய பகுதிகள் பதிப்புக்கு வராமலேயே உள்ளன.

**9. விஸ்வ மதுர கீர்த்தனை:**

சாஸ்திரிகளின் சகோதரர் டி.ஆர். வைத்தீஸ்வரன் அவர்களால் 1983ல் பதிப்பாகி வெளியிடப்பட்ட புத்தகம். இதில் முருகன் மதுர கீர்த்தனையிலிருந்து 14 பாடல்களும், சிவசக்தி கீர்த்தனிலிருந்து ஏழு பாடல்களும், ஹரிமதுர கீர்த்தனைகளிலிருந்து நான்கு பாடல்களும், திருக்குறள் மதுர கீர்த்தனைகள் இருந்து இரண்டு பாடல்களும் மற்றும் தேசிய கீதங்கள் அனைத்தும் சேர்த்து 35 பாடல்கள் அடங்கியது.

**10. தேசிய ஜெயகீதம்:**

பாரத மாதா, கொடி வணக்கம், காந்திஜி, கதர் ஆகியவை பற்றி தமிழ் பாடல்கள் அடங்கியது.

**11. ஸ்வரப்ரஸ்தாரம்:**

விரிவாக சுரம் பாடுவது பற்றி பகுதிகளாக சங்கீத பாணியில் வெளியிடப்பட்டது.

**12. அஸ்டபதி வைபவம்:**

ஸ்ரீ ஜெய தேவரைப்பற்றி சாஸ்திரி அவர்கள் இயற்றிய நாடகம் வெளியிடப்படாத, பதிப்பிற்கு வராத புத்தகங்கள் உள்ளன. அவை சிவசக்தி மதுர கீர்த்தனை, ஹரி மதுர கீர்த்தனை, சமஸ்கிருத கிருதிகள், நவகிரக கீர்த்தனைகள் முதலியன மற்றும் ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் பஞ்சரத்தின கீர்த்தனைகள், சுவாமியின் வாழ்க்கை அவரது பணி பற்றி ஆழ்ந்த ஆய்வு, காரைக்கால் அம்மையார், விராடபர்வம் சாந்தகுமாரி மற்றும் மித்ரவிஜயம் ஆகிய நாடகங்களும் இவற்றில் அடங்கும்.

**முடிவுரை:**

மாயூரம் விஸ்வநாத சாஸ்திரி தன் வாழ் நாள் முழுவதும் சிறந்த வாக்கேயக்காரராகவும், சிறந்த சங்கீத வித்வானாகவும் தமிழிசையின் வளத்தை பெருக்கிக் காட்டும் ஒற்றுமையான எடுத்துக்காட்டாக திகழ்ந்தார். இவரது வாழ்க்கை தமிழிசையின் செழிப்பிற்காக தன்னை அர்ப்பணித்த ஒரு அறிய பயணமாக அமைந்துள்ளது. இவர் இசைத்துறையில் மேற்கொண்ட ஆழமான தேடல் சரணாகதி, ஸ்ருதி, லய ஆராய்ச்சி, ராக பயிற்சி மற்றும் சாஸ்திரிய ஞானத்தை இசையாக்கிய திறமை ஆகியவை இன்றுவரை பல இசைக் கலைஞர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் வழிகாட்டியாக இருக்கின்றன. தனது இசைப் பயணத்தில் அவர் உருவாக்கிய வாக்கியங்கள் புதிய சிந்தனைகளையும், ராக வெளியிட்டின் புதிய பரிமாணங்களையும் கொண்டுள்ளன. இது அவரது இசைக்கருவி திறமையை மட்டும் அல்ல இசையின் ஆழமான உள்ளுணர்வையும் பிரதிபலிக்கிறது. இவரின் பங்களிப்புகளின் இசை என்பது வெறும் கலை அல்ல அது ஆன்மீகத்தின் ஒரு வடிவம் என்பதை உணர்த்தும் வகையில் உள்ளது. அவரது இசை தமிழிசையின் உள்ளார்ந்த ஆன்மீக குரலை வெளிக்கொண்டுவந்தது

இவ்வாறு இவரது வாழ்வும் இசை பங்களிப்பும் இன்றைய தலைமுறைக்கு பெரிய முன்மாதிரியாகவும், தமிழிசையின் வரலாற்று புத்தகத்தில் ஒளிரும் பக்கமாகும் நிலைத்து நிற்கின்றன. தமிழிசை வளர்ச்சியில் சாஸ்திரியாரின் பங்கு ஆழமானது.

திரு. விஸ்வநாத சாஸ்திரி அவர்கள் 1958 ஆம் வருடத்தின் கடைசி நாளில் இயற்கை எய்தினார்.

**துணை நூல் பட்டியல்:**

1. முனைவர். வீ.பா.க. சுந்தரம், தமிழிசைக் கலைக் களஞ்சியம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி. முதல் பதிப்பு - 1992.

2. பத்மாஸனி. ஆர், மாயூரம் விஸ்வநாத சாஸ்திரிகளின் கீர்த்தனைகள் பற்றிய ஒரு ஆய்வு, சென்னை பல்கலைக்கழகம், சென்னை – 2000

3. R. Padmasani, An analysis of Tirukkural Madhura kirthana-s of Mayuram Visvanatha Sastri, Mother Teresa Women's University, Kodaikanal - 2010